**நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.I, திண்டிவனம்,**

**முன்னிலை: ஸ்ரீமதி. ம. இளவரசி M.L.,**

**நீதித்துறை நடுவர் எண். I திண்டிவனம்.**

**2026 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 05-ம் நாள் வெள்ளிக்கிழமை**

**2057 திருவள்ளுவராண்டு ஸ்ரீபராபவ வருடம் வைகாசி திங்கள் 22-ம் நாள்**

**CC. No. 204 of 2024**

**(CNR No.TNVP10-005551-2024)**

| | | | |
|---|---|---|---|
| 1) | வழக்கு எண் | : | C.C. No. 204/2024 |
| 2 | குற்ற முறையீடுபவர் | : | தமிழ்நாடு அரசு அதன் சார்பாக<br>காவல் உதவி ஆய்வாளர்<br>ஒலக்கூர் காவல் நிலையம்,<br>குற்ற எண். 193/2021,<br>இதச பிரிவுகள் 147, 148, 294(b), 323, 324, 506(2) உ/இ 4 of TNPHW Act |
| 3 | எதிரிகள் விவரம் | | 1. கணேசன்(எ) லட்டு வயது 45,<br>த/பெ ஆறுமுகம்,<br>பிள்ளையார் கோவில் தெரு,<br>நொளம்பூர் கிராமம், திண்டிவனம் |
| | | | 2. ஆதிநாராயணன், வயது 59,<br>த/பெ சின்னதம்பி,<br>முருகன் கோவில் தெரு பின்புறம்,<br>நொளம்பூர் கிராமம், திண்டிவனம் |
| | | | 3. குமார், வயது 32,<br>த/பெ சின்னதம்பி,<br>பிள்ளையார் கோவில் தெரு,<br>நொளம்பூர் கிராமம்,, திண்டிவனம் |

ELAVARASI Digitally signed by ELAVARASI Date: 2026.06.05 05:33:19 +0530

| | | | |
|---|---|---|---|
| | | | 4. விஜயகுமார் த/பெ நாராயணன், வயது 32,<br>ராஜுவ்காந்தி, நொளம்பூர் கிராமம்,<br>திண்டிவனம் |
| | | | 5. பிரபு (எ) முனுசாமி, வயது 35,<br>த/பெ ஏழுமலை<br>ராஜுவ்காந்தி, நொளம்பூர் கிராமம்,<br>திண்டிவனம் |
| | | | 6. சதீஷ், வயது 25,<br>த/பெ நடராஜன்,<br>மாரியம்மன் கோவில் பின்புறம்,<br>நொளம்பூர் கிராம், திண்டிவனம் |
| | | | 7. முனியப்பன் (எ) சந்தோஷ்,<br>த/பெ நடராஜன்,<br>மாரியம்மன் கோவில் பின்புறம்,<br>நொளம்பூர் கிராம், திண்டிவனம் |
| 4 | சம்பவ தேதி | : | 05.04.2021 |
| 5 | முறையீடு | : | 07.04.2021 |
| 6 | எதிரி நீதிமன்ற காவலில் இருந்த நாள் | : | Anticipatory Bail |
| 7 | குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்ட நாள் | : | 30.10.2024 |
| 8 | குற்றச்சாட்டு வனையப்பட்ட நாள் | : | 30.12.2024 |
| 9 | தாக்கல் செய்யப்பட்ட குற்ற பல்வகை மனுக்களின் விவரம் | : | ---- |
| 10 | சாட்சிகளின் விசாரணை | : | |

| Witness | Date of Chief | Date of Cross |
|---|---|---|
| PW-1 | 23.9.2025 | 23.9.2025 |

ELAVARASI

Digitally signed by ELAVARASI
Date: 2026.06.05 05:33:26 +0530

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | PW-2 | 29.10.2025 | 29.10.2025 |
| | | | PW-3 | 12.11.2025 | 12.11.2025 |
| | | | PW-4 | 29.04.2026 | 29.04.2026 |
| 11 | பிரிவு 351(1)(பி)BNSS ன் கீழ் எதிரியிடம் கேள்வி கேட்கப்பட்ட நாள் | : | 04.05.2026 | | |
| 12 | எதிரிகள் தலைமறைவு காலம் பற்றிய விவரம் | : | இல்லை | | |
| 13 | மேல்முறையீடு நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட இடைக்கால தடை உத்தரவு பற்றிய விவரங்கள் | : | இல்லை | | |
| 14 | தண்டனை அல்லது உத்தரவு | : | A1 எதிரி மீது இதச பிரிவுகள் 147, 148, 294(b), 323,324,506(2) உ/இ தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்பு சட்டம் பிரிவு 4 ன் கீழும், A2 எதிரி மீது இதச பிரிவுகள் 147, 148, 294(b), 323, 506(2) உ/இ தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்பு சட்டம் பிரிவு 4 ன் கீழும், A3 to A7 எதிரிகள் மீது இதச பிரிவுகள் 147, 148,294(b), 506(2) ன் கீழான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பு சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படாததால் எதிரிகள் குற்றவாளிகள் இல்லை என தீர்மானித்து பிரிவு 271(1) - BNSS- ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. | | |
| 15 | காலதாமதத்தின் விளக்கம் | : | ——— | | |

ELAVARASI

Digitally signed by ELAVARASI
Date: 2026.06.05 05:33:32 +0530

இவ்வழக்கானது கடந்த 30.10.2024-ம் தேதி இந்நீதிமன்ற கோப்பில் எடுக்கப்பட்டு, இந்த வழக்கானது இந்நீதிமன்றத்தில் 06.05.2026-ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்த போது, அரசு தரப்பில் அரசு குற்றத்துறை வழக்கறிஞர் நிலை 1 அவர்கள் ஆஜராகியும், எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.A.V.சம்பத், B.A.B.L., அவர்கள் ஆஜராகியும், விசாரணைக்கு வரப்பெற்று இருதரப்பு வாதம் கேட்கப்பட்டு பின்பு வழக்கு ஆவணங்களையும் பரிசீலக்கப்பட்டு இன்று இந்நீதிமன்றத்தில் வழங்கும்.,

## தீர்ப்புரை

### 1) குற்ற அறிக்கையின் சுருக்கம்:-

இவ்வழக்கின் சாட்சி ரேகா (எ) நித்தியா தன் தாய் வீடான நொளம்பூர் கிராமத்திற்கு ஓட்டு போடுவதற்காக தனது கைகுழந்தையுடன் வந்து 05.04.2021ம் தேதி இரவு 10.00 மணிக்கு சாட்சி 2, சாட்சி 3, சாட்சி 4 ஆகியோர்கள் வீட்டில் இருந்தபோது இவ்வழக்கின் எதிரிகள் வந்து வீட்டின் கதவை தட்டி சாட்சி 2 பிரகாஷ் கதவை திறந்தபோது 1வது எதிரி லட்டு (எ) கணேசன், சாட்சி பிரகாஷ் என்பவரைப் பார்த்து டேய் பாடு தேவிடியா பையா வெளியே வாடா நாளைக்கு நடக்கும் தேர்தலில் நீயும் உய குடும்பமும் இரட்டை இலை சின்னத்திற்கு ஓட்டு போடவில்லை என்றால் உங்களை உயிரோடு விடமாட்டோம் என்று சொல்லிக்கொண்டே சாட்சி 2 பிரகாஷ் என்பவரை அடிக்க முற்படும்போது சாட்சி 1 ரேகா (எ) நித்தியா தடுத்ததை பார்த்த 1வது எதிரி லட்டு (எ) கணேசன் சாட்சி 1 ஐ தேவிடியா போடி என்று அசிங்கமாக திட்டி சாட்சி 1 ரேகாவை பிடித்துத்தள்ளி வீட்டின் வராண்டாவில் இருந்த பிளாஸ்டிக் சேரை

ELAVARASI
Digitally signed by ELAVARASI
Date: 2026.06.05 05:33:38 +0530

எடுத்து சாட்சி 1 ரேகாவின் மார்பில் பலவந்தமாக தாக்கி சொற்பகாயத்தையும், இதை தடுக்க வந்த சாட்சி 3 விமலா, சாட்சி 4 கற்பகம் ஆகிய இருவரையும் 2 வது எதிரி ஆதிநாராயணன் பெண்கள் என்று பாராமல் சாட்சிகள் 1,3,4 ஆகியோரை பொது மக்கள் மத்தியில் கீழே பிடித்து தள்ளிய பின்னர் எதிரிகள் லட்டு (எ) கணேசன், ஆதிநாராயணன், குமார், விஜயகுமார், சதீஷ், சந்தோஷ் ஆகியோர்கள் சாட்சி 2 பிரகாஷ் என்பவரை அவரது குடும்பத்தாரையும் பார்த்து உயிரோடு விடமாட்டோம் என்று மிரட்டுவிட்டு சென்ற குற்றம் புரிந்தததாக எதிரிகள் மீது இதச பிரிவுகள் 147, 148, 294(b), 323, 324, 506(2) உ/இ 4 of TNPHW Act ன் படி ஓலக்கூர் காவல் உதவி ஆய்வாளர் அவர்களால் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. இந்நீதிமன்றத்தால் கோப்பிற்கு எடுக்கப்பட்டு இவ்வழக்கானது A1 எதிரி மீது இதச பிரிவுகள் 147, 148, 294(b), 323,324,506(2) உ/இ தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்பு சட்டம் பிரிவு 4 ன் கீழும், A2 எதிரி மீது இதச பிரிவுகள் 147, 148, 294(b), 323, 506(2), உ/இ தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்பு சட்டம் பிரிவு 4 ன் கீழும், A3 to A7 எதிரிகள் மீது இதச பிரிவுகள் 147, 148,294(b), 506(2) ன் கீழ் விசாரணைக்கு எடுக்கப்பட்டு எதிரிகளுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது.

3. எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜரான போது வழக்கு ஆவணங்களின் நகல்கள் பிரிவு 230- BNSS - ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டுள்ளது.

4. வழக்கின் ஆவணங்களை பரிசீலனை செய்ததில் எதிரிகள் மீது குற்றச்சாட்டு

ELAVARASI Digitally signed by ELAVARASI Date: 2026.06.05 05:33:42 +0530

வினவுவதற்கு போதுமான முகாந்திரம் இருந்ததால் A1 எதிரி மீது இதச பிரிவுகள் 147, 148, 294(b), 323,324,506(2) உ/இ தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்பு சட்டம் பிரிவு 4 ன் கீழும், A2 எதிரி மீது இதச பிரிவுகள் 147, 148, 294(b), 323, 506(2), உ/இ தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்பு சட்டம் பிரிவு 4 ன் கீழும், A3 to A7 எதிரிகள் மீது இதச பிரிவுகள் 147, 148,294(b), 506(2) ன் கீழான குற்றச்சாட்டுகள் குறித்து வனைந்து விளக்கி கூறி வினவிய போது எதிரிகள் அவற்றை மறுத்து தாங்கள் குற்றவாளிகள் இல்லை என்று கூறியதால் அரசு தரப்பில் சாட்சி விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

5) இந்த வழக்கில் அரசுத்தரப்பில் அ.சா. 1 முதல் அ.சா. 4 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளார்கள். அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.8 வரையிலான சான்றாவணங்கள் முன்னிடப்பட்டுள்ளது. எதிரிகள் தரப்பில் சாட்சியம் அளிக்கப்படவில்லை.

**<u>6) அரசு தரப்பு சாட்சிகளின் சுருக்கம் :</u>**

- ➔ பாதிக்கப்பட்ட மற்றும் நிகழ்நிலை புகார்தாரரான அ.சா. 1 சம்பவம் பற்றியும், புகார் அளித்தது பற்றி சாட்சியம் அளித்து தடய பொருளை மறுத்துள்ளார்
- ➔ பார்வை மகஜர் சாட்சிகளான அ.சா. 2 காவல் நிலையத்தில் கையொப்பம் செய்ததாக அரசு தரப்பு வழக்கத்திற்கு ஆதரவளிக்காமல் சாட்சி அளித்துள்ளார்.
- ➔ கண்ணுற்ற சாட்சியாக முன்னிலைப்படுத்தப்பட்ட அ.சா. 3 சம்பவம் பற்றி சாட்சியம் அளித்துள்ளார்.

ELAVARASI
Digitally signed by ELAVARASI
Date: 2026.06.05 05:33:47 +0530

➔ காவல் உதவி ஆய்வாளர் அ.சா. 4 வழக்கின் புலன் விசாரணை பற்றி சாட்சியம் அளித்துள்ளார்.

7). அரசு தரப்பு சாட்சியங்களிலிருந்து எதிரிகளை பாதிக்கக்கூடிய அம்சங்கள் குறித்து எதிரிகளிடம் பிரிவு 351(1)(பி)BNSS -ன் படி வினவியபோது எதிரிகள் பொய் சாட்சி என்றும், பொய் வழக்கு என்றும், தங்களது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்று தெரிவித்தனர்.

8) **<u>தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை:-</u>**

**இவ்வழக்கில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை யாதெனில் A1 எதிரி மீது இதச பிரிவுகள் 147, 148, 294(b), 323,324,506(2) உ/இ தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்பு சட்டம் பிரிவு 4 ன் கீழும், A2 எதிரி மீது இதச பிரிவுகள் 147, 148, 294(b), 323, 506(2) உ/இ தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்பு சட்டம் பிரிவு 4 ன் கீழும், A3 to A7 எதிரிகள் மீது இதச பிரிவுகள் 147, 148,294(b), 506(2) ன் கீழான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.**

9) வாய்மொழி வாதம் கேட்கப்பட்டது. வழக்கு கோப்பு மற்றும் சாட்சியங்கள் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது.

10) அரசு தரப்பில் வாய்மொழி வாதம் முன்வைக்கப்படவில்லை

11) எதிரிகள் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் இவ்வழக்கில் சம்பவம் நடைபெற்று ஒரு நாள் காலதாமதமாக மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்று, 2

ELAVARASI Digitally signed by ELAVARASI Date: 2026.06.05 05:33:53 +0530

நாட்கள் காலதாமதமாக புகார் கொடுத்து, அதன் பிறகு 5 நாட்கள் கழித்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது. காலதாமதம் குறித்து தகுந்த காரணங்கள் முன்வைக்கப்படவில்லை. வழக்கில் தடயப் பொருள் கைப்பற்றப்படவில்லை. சம்பவயிட சாட்சிகள் சம்பவம் குறித்து முரண்பட சாட்சியம் அளித்துள்ளனர். தேர்தல் சம்பந்தமான பிரச்சனை என்ற போதிலும் தேர்தல் ஆணையத்திற்கு சம்பவம் குறித்து எவ்வித தகவலும் புகாரும் கொடுக்கப்படவில்லை. பட்டியல் சாட்சி-2 பிரகாஷ்க்கும், எதிரிகளுக்கும் இருந்த முன் விரோதம் காரணமாக பொய் புகார் கொடுக்கப்பட்டுள்ளது. எனவே, எதிரிகளை குற்றவாளிகள் அல்ல என தீர்மானித்து விடுதலை செய்யுமாறு வாதிட்டார்.

**12) சாட்சிய பரிசீலனைகளும், தீர்வும் ;-**

**வழக்கின் சம்பவம் குறித்து அ.சா. 1 முதல் அ.சா. 3 ஆகியோர்கள் சாட்சியம் அளித்துள்ளனர் :**

இவ்வழக்கில் காயம்பட்ட மற்றும் நிகர்நிலை புகார்தாரரான **அ.சா.1 திருமதி.நித்யா (எ) ரேகா** அவரது சாட்சியத்தில் கடந்த 04.04.2021 அன்று ஓட்டு போடுவதற்காக நொளம்பூரில் உள்ள தனது அம்மா வீட்டுக்கு வந்ததாகவும், 05.04.2021 இரவு 10.00 மணியளவில் தான் தனது அம்மா வீட்டில் இருந்தபோது எதிரிகள் லட்டு (எ) கணேசன் ஆதிநாராயணன், குமார், விஜயகுமார், பிரபு, சதீஷ் சந்தோஷ் ஆகியோர் கத்தி, இரும்பு, ராடு, சவுக்கு தடி ஆகியவற்றை எடுத்து வந்து வீட்டை தட்டினார்கள் எனவும், தனது அண்ணன் பிரகாஷ் வீட்டை திறந்த போது எதிரிகள் அனைவரும் தேவிடியா பையா, பாடு வெளியே வாடா சூரியனுக்கு ஓட்டு போடக்கூடாது இரட்டை

ELAVARASI Digitally signed by ELAVARASI Date: 2026.06.05 05:33:59 +0530

இலைக்கு ஓட்டு போட வேண்டும் இல்லையென்றால் தலையை வெட்டி விடுவேன் என மிரட்டியதாகவும், தான் தடுக்க சென்ற போது பறையனக்கட்டிகிட்ட தேவிடியா வந்து பேசக்கூடாது எனக்கூறி அங்கிருந்து பிளாஸ்டிக் சேரை எடுத்து தனது மார்பு, தலையில் 1,2 எதிரிகள் அடித்தார்கள் எனவும், அந்த சமயம் தனது ஐந்து மாத கைக்குழந்தை வைத்திருந்தபோது தன்னை அடித்து கீழே தள்ளினார்கள் எனவும் குறிப்பிட்டுள்ளார். அதனை தடுக்க வந்த தனது அம்மா விமலா மற்றும் பாட்டி கற்பகம் ஆகியோர்களை எதிரிகள் 7 பேரும் பிடித்து கீழே தள்ளினார்கள் எனவும், ஜாதி பெயரை கூறி தரை குறைவாக பேசினார்கள் எனவும், தனது அண்ணன் தோட்டத்திற்கு வெளியே ஓடியவரை எதிரிகள் பின் தொடர்ந்து துரத்தினார்கள் எனவும், அடிபட்ட தன்னை திண்டிவனம் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார்கள் எனவும், இதுகுறித்து காவல் நிலையத்தில் புகார் அளித்ததாகவும் குறிப்பிட்டுள்ளார்.

13) எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணையில் அ.சா. 1 தனது சொந்த ஊர் நொளம்பூர் எனவும், கடந்த 8 வருடங்களாக திண்டிவனத்தில் வசிப்பதாகவும், காவல் நிலையத்திற்கு புகார் கொடுக்க சென்றபோது தானும் தனது கணவரும் சென்றதாகவும், தான் சொல்ல சொல்ல தனது கணவர் எழுதியதாகவும் குறிப்பிட்டுள்ளார். சம்பவம் நடந்து மறுநாள் சிகிச்சை எடுத்துக் கொண்டதாகவும் போலீசார் சொன்னதால் போகவில்லை எனவும் குறிப்பிட்டுள்ளார். சம்பவத்திற்கு மறுநாள் 06 ம் தேதி முதலமைச்சர் எலக்சன் நடந்ததாகவும் குறிப்பிட்டுள்ளார். தனது

ELAVARASI Digitally signed by ELAVARASI Date: 2026.06.05 05:34:05 +0530

அண்ணன் பிரகாஷ் எம்.எஸ்.சி., பிஎட்., படித்துவிட்டு வங்கியில் நகை மதிப்பீட்டாளராக வேலை செய்வதாகவும், தேர்தல் சமயம் என்பதால் அரசியல் கட்சியிலும் வேலை செய்தார் எனவும், தனது அண்ணனும் எதிரிகளும் வெவ்வேறு கட்சியை சார்ந்தவர்கள் எனவும் குறிப்பிட்டுள்ளார். தான் 07 ம் தேதி கொடுத்த புகாரை ஒரு வாரம் கழித்து வழக்கு பதிவு செய்தார்கள் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

14) சம்பவயிட சாட்சியாக முன்னிலைப்படுத்தப்பட்ட அ.சா. 1ன் அம்மா **அ.சா. 3 திருமதி.விமலா** அவரது சாட்சியத்தில் கடந்த 04.04.2021 அன்று தனது மகள் திண்டிவனத்தில் இருந்து ஓட்டு போடுவதற்காக தனது வீட்டுக்கு வந்தார் எனவும், 05.04.2021 இரவு 10.00 மணியளவில் எதிரிகள் தனது வீட்டின் கதவை தட்டினார்கள் எனவும், தனது மகன் பிரகாஷ் திறந்தவுடன் எதிரிகள் உதய சூரியனுக்கு ஓட்டு போட கூடாது, ஓட்டு போட்டால் தலையை வெட்டுவோம் என மிரட்டினார்கள் எனவும், தனது மகள் மறித்த போது எதிரிகள் அனைவரும் சேர், கூடை, தட்டு, உருட்டுகட்டை, கத்தி ஆகியவற்றால் அடித்து தனது மகள் ஒரு வயது கைக்குழந்தை உடன் இருந்தவர் கீழே விழுந்துவிட்டார் எனவும், தானும் தனது சின்ன மாமியார் கற்பகமும் மறித்த போது எதிரிகள் தங்களையும் அடித்து கீழே தள்ளி விட்டார்கள் எனவும், தனது மகனை எதிரிகள் துரத்தி சென்று விட்டார்கள் எனவும், தனது மகளை ஜாதியின் பெயரை சொல்லி தகாத வார்த்தைகளால் திட்டினார்கள் எனவும் குறிப்பிட்டுள்ளார். எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணையில் அ.சா. 3 சம்பவத்தன்று தகவல் அளித்து பத்து நிமிடத்தில் போலீசார் அங்கு வந்து விசாரித்தார்கள் எனவும், போலீசாருக்கு தனது

ELAVARASI Digitally signed by ELAVARASI Date: 2026.06.05 05:34:10 +0530

மகள் தகவல் சொன்னார் எனவும், எதிரிகள் ஆயுதங்களை எடுத்து சென்று விட்டார்கள் எனவும், வீட்டில் உடைந்த பொருட்களை போலீசார் கைப்பற்றவில்லை, வீடியோ எடுத்தார்கள் எனவும், தனக்கும் தனது சின்ன மாமியார் கற்பகமும் அடிப்பட்டதாக மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டோம் எனவும், அந்த மருத்துவ ஆவணங்களை போலீசாரிடம் ஒப்படைத்ததாகவும் குறிப்பிட்டுள்ளார். சம்பவம் நடந்ததாக சொல்லும் தினத்திற்கு மறுநாள் சட்டமன்றத் தேர்தல் எனவும், தனது வீட்டுக்கும், பூத்துக்கும் சுமார் கால் கி.மீ தூரம் இருக்கும் எனவும், தனது மருமகன் திண்டிவனத்தில் வழக்கறிஞராக பணிபுரிவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

15) )சம்பவயிட சாட்சியான அ.சா.1ன் அண்ணன் பட்டியல் சாட்சி 2 பிரகாஷ் என்பவர் இறந்துவிட்டதாக அ.சா.1, அ.சா.3 ஆகியோர் சாட்சியம் அளித்துள்ளனர். மேலும் காவல்துறையினர் பட்டியல் சாட்சி 2 பிரகாஷ் என்பவர் இறந்துவிட்டதாக கிராம நிர்வாக அலுவலர் சான்றுடன் அறிக்கை தாக்கல் செய்துள்ளார். மற்றொரு சம்பவயிட சாட்சியான பட்டியல் சாட்சி 4 கற்பகம் தற்போது உடல்நிலை குறைவால் கண் பார்வையின்றி இருப்பதால் நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க இயலவில்லை என மருத்துவர் ஆவணங்களுடன் போலீசார் அறிக்கை தாக்கல் செய்துள்ளனர். பட்டியல் சாட்சி 6 பச்சமுத்து என்பவர் இறந்துவிட்டதாக இறப்பு சான்றிதழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே, பட்டியல் சாட்சிகள்- 2. பிரகாஷ், 4. கற்பகம் 6. பச்சமுத்து ஆகியோர்கள் வழக்கு விசாரணையில் இருந்து விலக்கப்பட்டுள்ளனர்.

ELAVARASI Digitally signed by ELAVARASI Date: 2026.06.05 05:34:15 +0530

16) கடந்த 05.04.2021 இரவு 10.00 மணிக்கு அ.சா. 1, அ.சா. 3 மற்றும் பட்டியல் சாட்சிகள் 2, 4 ஆகியோர் நொளம்பூரில் உள்ள அவர்களது வீட்டில் இருந்தபோது எதிரிகள் ஆயுதத்துடன் வந்து கதவைத் தட்டி குறிப்பிட்ட கட்சிக்கு ஓட்டு போட வேண்டும் என மிரட்டி 1வது எதிரி அ.சா. 1ஐ கீழே தள்ளி பிளாஸ்டிக் சேரால் மார்பில் அடித்து சொற்பக்காயம் ஏற்படுத்தினார் எனவும், அதனை தடுக்க வந்த அ.சா.3 மற்றும் பட்டியல் சாட்சி 4 கற்பகம் ஆகியோர்களை 2வது எதிரி கீழே தள்ளினார் எனவும், எதிரிகள் அனைவரும் கொலை மிரட்டல் விடுத்தார்கள் என்பது அரசு தரப்பு வழக்காகும்.

17) தேர்தலுக்கும் முந்தைய நாள் இரவு நேரத்தில் வீட்டை கதவு தட்டி குறிப்பிட்ட கட்சிக்கு ஓட்டு போட வேண்டும் என மிரட்டியதாக குறிப்பிட்டுள்ள நிலையில் இந்த சம்பவம் குறித்து தேர்தல் ஆணையத்திற்கு தெரிவிக்கவில்லை என புலன் விசாரணை அதிகாரி அ.சா. 4 குறிப்பிட்டுள்ளார். 1வது எதிரி லட்டு (எ) கணேசன், அ.சா. 1ஐ கீழே தள்ளி சேரால் மார்பில் அடித்தார் என இறுதி அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அ.சா. 1 அவரது சாட்சியத்தில் 1, 2 எதிரிகள் கீழே தள்ளி பிளாஸ்டிக் சேரால் மார்பு மற்றும் தலையில் அடித்ததாக குறிப்பிட்டுள்ளார். எதிரிகள் அனைவரும் அ.சா. 1ஐ தாக்கியதாக அவரது அம்மா அ.சா. 3 குறிப்பிட்டுள்ளார். அ.சா.1க்கு பதிவு செய்யப்பட்ட விபத்து பதிவேட்டில் 06.04.2021 மதியம் 01.22 மணியளவில் அ.சா. 1ஐ அவரது கணவர் மகேந்திரன் என்பவர் மருத்துவமனைக்கு அழைத்து வந்ததாகவும், 05.04.2021 இரவு 10.00 மணியளவில் அவரது வீட்டில் தெரிந்த

ELAVARASI
Digitally signed by ELAVARASI
Date: 2026.06.05 05:34:20 +0530

20 நபர்கள் தாக்கியதாகவும், அ.சா. 1 க்கு நெஞ்சு பகுதியில் தொடு வலி இருந்ததாகவும் அவருக்கு ஏற்பட்ட காயம் சொற்பகாயம் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. 06.04.2021 இரவு சுமார் 10.00 மணியளவில் சம்பவம் நடைபெற்று மறுநாள் மதியம் 01.22 மணியளவில் அ.சா.1 மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். மருத்துவமனைக்கு அழைத்து சென்றதாக விபத்து பதிவேட்டில் குறிப்பிட்டுள்ள அவரது கணவர் மகேந்திரன் இவ்வழக்கில் சாட்சியாக விசாரிக்கப்படவில்லை. அ.சா. 1 அவரது சாட்சியத்தில் சம்பவம் நடைபெற்று மறுநாள் சிகிச்சை எடுத்துக் கொண்டதாகவும், போலீசார் சொல்லி போகவில்லை எனவும் குறிப்பிட்டுள்ளார்.

18) அ.சா. 3 மற்றும் பட்டியல் சாட்சி 4 கற்பகம் ஆகியோரை 2 வது எதிரி பிடித்து கீழே தள்ளியதாக இறுதி அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அ.சா.1 மற்றும் அ.சா.3 ஆகியோர் அவர்களது சாட்சியத்தில் எதிரிகள் அனைவரும் அ.சா. 3 விமலா மற்றும் கற்பகத்தை கீழே தள்ளியதாக சாட்சியம் அளித்துள்ளனர். மேற்படி சாட்சியங்களில் இருந்து எந்த எதிரி யாரை தாக்கினார் என்பது குறித்து அ.சா. 1, அ.சா.3 ஆகியோர் புகார் மனுவிற்கு முரண்பட சாட்சியும் அளித்துள்ளனர் என்பது தெளிவாகிறது. மேலும் சம்பவம் நடைபெற்று சுமார் 12.00 மணி நேரத்திற்கு பின்னர் அ.சா. 1 மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். 05.04.2021 இரவு 10.00 மணியளவில் சம்பவம் நடைபெற்று, 06.04.2021 மதியம் 01.22 மணியளவில் அ.சா. 1 மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, 07.04.2021 அன்று காவல் நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டு, அன்றைய தினமே மனு ரசீது பதிவு செய்யப்பட்டு, 11.04.2021

ELAVARASI Digitally signed by ELAVARASI Date: 2026.06.05 05:34:25 +0530

அன்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி காலதாமதம் குறித்த அரசு தரப்பில் தகுந்த காரணம் முன் வைக்கப்படவில்லை. சம்பவத்திற்கு மறுநாள் சட்டமன்றத் தேர்தல் மற்றும் சட்டமன்ற தேர்தலுக்கான பூத்தில் இருந்து சுமார் 1/4 கிலோ மீட்டர் தூரத்திற்கு உள்ள அ.சா. 1 ன் வீட்டில் சம்பவம் நடைபெற்றுள்ள நிலையில் அ.சா. 1 வீட்டு பக்கத்தில் வரிசையாக குடியிருப்புகள் இருந்த நிலையிலும் தனி நபர்கள் யாரும் சாட்சியாக விசாரிக்கப்படவில்லை. சம்பவயிட சாட்சியாக முன்னிலைப்படுத்தப்பட்ட அ.சா. 1, அ.சா. 3 ஆகியோர் எந்த எதிரி தாக்கினார் என முரண்பட சாட்சியம் அளித்துள்ளனர். மற்ற சம்பவயிட சாட்சிகளான பட்டியல் சாட்சி 2 பிரகாஷ் இறந்துவிட்டபடியாலும் மற்றும் பட்டியல் சாட்சி 4 கற்பகம் உடல்நிலை குறைவினாலும் ஆகியோர் இவ்வழக்கில் விசாரிக்கப்படவில்லை. எனவே, மேற்படி சாட்சயங்களில் இருந்து சம்பவம் குறித்து சந்தேகத்துக்கு இடமின்றி அரசு தரப்பில் நிரூபிக்க வில்லை என இந்நீதிமன்றம் கருதுகிறது.

19) பார்வை மகஜர் சாட்சியாக முன்னிலைப்படுத்தப்பட்ட **அ.சா. 2 திரு.மணி** அவரது சாட்சியத்தில் பார்வை மகஜரில் உள்ள 1 வது சாட்சி கையொப்பத்தை ஒலக்கூர் காவல் நிலையத்தில் செய்ததாக குறிப்பிட்டுள்ளார். அ.சா.2 பிறழ் சாட்சியமாக கருதப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளார். எனினும், அரசு தரப்பு வழக்கத்திற்கு ஆதரவாக எவ்வித சாட்சமும் முன்னிடவில்லை. மேலும், மற்றொரு பார்வை மகஜர் சாட்சியான பட்டியல் சாட்சி 6 பச்சமுத்து இறந்து விட்டதால் அவர்

ELAVARASI Digitally signed by ELAVARASI Date: 2026.06.05 05:34:30 +0530

வழக்கில் விசாரிக்கப்படவில்லை.

20) இவ்வழக்கில் புலன் விசாரணை அதிகாரி **அ.சா. 4 திரு.அர்ஜுனன்**, காவல் உதவி ஆய்வாளர் அவரது சாட்சியத்தில் கடந்த 07.04.2021 அன்று நிலைய பொறுப்பில் இருந்த தலைமை காவலர் 711 சக்திவேல் நிலையப் பொறுப்பில் இருந்தபோது அ.சா.1 நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று நிலைய மனு எண். 177/2021 பதிவு செய்துள்ளார். அதனை தான் பரிசீலித்து 11.4.2021 அன்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். அன்றைய தினமே காலை 10.00 மணிக்கு சம்பவயிடம் சென்று சாட்சிகள் முன்னிலையில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். சாட்சிகளின் வாக்குமூலத்தின் படி அடையாளம் தெரிந்த பெயர் தெரியாத 15 நபர்கள் சம்பவத்தில் ஈடுபடவில்லை வேடிக்கை பார்த்ததாக தெரிய வந்ததால் அறிக்கையின் மூலம் எதிரிகள் அறிக்கை தாக்கல் செய்துள்ளார். எதிரிகள் நீதிமன்றத்தில் முன்பிணை பெற்றுள்ளனர். அ.சா. 1க்கு சிகிச்சை அளித்த மருத்துவர் விசாரித்து காயச்சான்று பெற்றுள்ளார். வழக்கின் புலன் விசாரணை முடித்துக்கொண்டு எதிரிகள் மீது இதச பிரிவுகள் 147, 148, 294(b), 323, 324, 506(2) உ/இ 4 of TNPHW Act சட்டப்பிரிவின் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்ததாக குறிப்பிட்டுள்ளார்.

21) எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணையில் அ.சா. 4, 05.04.2021 அன்று சம்பவம் நடைபெற்று 07.04.2021 அன்று புகார் கொடுக்கப்பட்டு 11.04.2021 அன்று வழக்கு பதிவு

ELAVARASI Digitally signed by ELAVARASI Date: 2026.06.05 05:34:35 +0530

செய்யப்பட்டுள்ளது. அந்த காலதாமதம் குறித்து இறுதி அறிக்கையில் குறிப்பிடவில்லை புகார்தாரர் மட்டும் மருத்துவ சிகிச்சை எடுத்துக்கொண்டார், மற்ற நபர்கள் மருத்துவ சிகிச்சை எடுத்துக்கொள்ளவில்லை, தேர்தல் தொடர்பான பிரச்சனை என்பதால் போலீசார் தரப்பிலிருந்து தேர்தல் ஆணையரிடம் புகார் கொடுக்கவில்லை, இவ்வழக்கில் அ.சா. 1ன் கணவரை வழக்கில் சாட்சியாக விசாரிக்கவில்லை, அவர் சம்பவத்தின் போது சம்பவயிடத்தில் இல்லை, விசாரணையில் புகார்தாரரின் சகோதரர் மற்றும் எதிரிகளுக்கு ஏற்கனவே பிரச்சனை இருந்ததாக தெரிய வரவில்லை எனவும் குறிப்பிட்டுள்ளார்.

22) புகாரில் குறிப்பிட்டுள்ள அடையாளம் தெரிந்த பெயர் தெரியாத 15 நபர்கள் சாட்சிகளின் விசாரணையின் போது வேடிக்கை பார்த்தவர்கள் சம்பவத்தில் ஈடுபடவில்லை என்பதால் எதிரிகள் நீக்கல் அறிக்கை தாக்கல் செய்ததாக புலன் விசாரணை அதிகாரி குறிப்பிட்டுள்ள நிலையில், மேற்படி 15 நபர்களில் இவ்வழக்கில் சம்பவயிட சாட்சிகளாக விசாரிக்கப்படவில்லை. அ.சா. 1 மற்றும் அவரது குடும்பத்தில் உள்ள நபர்களை மட்டுமே கண்ணுற்ற சாட்சிகளாக பட்டியல் சாட்சியில் குறிப்பிடப்பட்டுள்ளது. இது புலன் விசாரணையின் குறைபாடாகும்.

23) காயம்பட்ட அ.சா. 1 மற்றும் சம்பவயிட சாட்சியான அ.சா. 3 ஆகியோர் சம்பவம் குறித்து முரண்பட சாட்சியம் அளித்துள்ளனர். பார்வை மகசர் சாட்சியான அ.சா. 2 அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவளிக்காமல் சாட்சியம் அளித்துள்ளார். காவல் உதவி

ELAVARASI Digitally signed by ELAVARASI Date: 2026.06.05 05:34:41 +0530

ஆய்வாளர் அ.சா. 4 வழக்கின் புலன் விசாரணை பற்றி சாட்சியம் அளித்துள்ளார். எனவே, மேற்படி சாட்சியங்களில் இருந்து எதிரிகள் சட்டத்துக்கு புறம்பாக ஆயுதங்களுடன் ஒன்று கூடி, அ.சா. 1ஐ தகாத வார்த்தைகளால் திட்டி, கையாலும், சேராலும் அடித்து சொற்பக்காயம் ஏற்படுத்தி, கொலை மிரட்டல் விடுத்ததான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் சந்தேகத்துக்கு இடமின்றி நிருபணம் செய்யப்படவில்லை என இந்நீதிமன்றம் கருதுகிறது.

24). அரசு தரப்பு சாட்சியங்கள் அ.சா.1 முதல் அ.சா.4 வரையிலான சாட்சிகள் மற்றும் அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.8 வரையிலான சான்றாவணங்கள்படியாக A1 எதிரி மீது இதச பிரிவுகள் 148, 294(b), 323, 506(2) உ/இ தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்பு சட்டம் பிரிவு 4 ன் கீழும், A2 எதிரி மீது இதச பிரிவுகள் 148,506(2) உ/இ தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்பு சட்டம் பிரிவு 4 ன் கீழும், A3 to A7 எதிரிகள் மீது இதச பிரிவுகள் 148, 506(1) ன் கீழான குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு இடமற்ற வகையில் நிரூபணம் செய்யப்படவில்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது.

**25). இறுதியாக, A1 எதிரி மீது இதச பிரிவுகள் 147, 148, 294(b), 323,324,506(2) உ/இ தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்பு சட்டம் பிரிவு 4 ன் கீழும், A2 எதிரி மீது இதச பிரிவுகள் 147, 148, 294(b), 323, 506(2) உ/இ தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்பு சட்டம் பிரிவு 4 ன் கீழும், A3 to A7 எதிரிகள் மீது இதச பிரிவுகள்**

ELAVARASI Digitally signed by ELAVARASI Date: 2026.06.05 05:34:46 +0530

**147, 148,294(b), 506(2) ன் கீழான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பு சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படாததால் எதிரிகள் குற்றவாளிகள் இல்லை என தீர்மானித்து பிரிவு 271(1) - BNSS- ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.**

26. இவ்வழக்கில் வழக்கு சொத்துக்கள் எதுவும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை. எதிரிகள் எழுதிக்கொடுத்த பிணைப்பத்திரம் அது இதன் மூலம் ரத்து செய்யப்படுகிறது.

என்னால் இத்தீர்ப்புரை சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக கணினயில் சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2026 ம் ஆண்டு ஜூன் திங்கள் 05-ம் நாள் வெள்ளிக்கிழமை என்னால் அவையறிய பகரப்பட்து.

ELAVARASI
Digitally signed by ELAVARASI
Date: 2026.06.05 05:34:51 +0530

நீதித்துறை நடுவர் எண். I,
திண்டிவனம்.

**இணைப்பு:-**

**அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள்:-**

| | | |
|---|---|---|
| அ.சா.1 | திருமதி. ரேகா | நிகழ்நிலை புகார்தாரர் |
| அ.சா.2 | திரு. மணி | பார்வை மகசர் சாட்சி |
| அ.சா.3 | திருமதி.விமலா | கண்ணுற்ற சாட்சி |
| அ.சா.4 | திரு.அர்ச்சுணன் காவல்உ தவி ஆய்வாளர் | புலன் விசாரணை அதிகாரி |

**அரசு தரப்பில் குறியிடப்பட்ட சான்றாவணங்கள்**:-

| அ.சா.ஆ. எண்கள். | தேதி | ஆவணங்களின் விபரம் | ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்ட சாட்சிகள் |
|---|---|---|---|
| அ.சா.ஆ.1 | 07.04.2021 | புகார் மனு | அ.சா.1 |
| அ.சா.ஆ.2 | 07.04.2021 | பார்வை மகஜரில் உள்ள சாட்சியின் 1 வது கையொப்பம் | அ.சா.2 |
| அ.சா.ஆ.3 | 07.04.2021 | மனு ரசீது எண்.177/2021 | அ.சா.4 |
| அ.சா.ஆ.4 | 11.04.2021 | முதல் தகவல் அறிக்கை | அ.சா.4 |
| அ.சா.ஆ.5 | 11.04.2021 | பார்வை மகஜர் | அ.சா.4 |
| அ.சா.ஆ.6 | 11.04.2021 | மாதிரி வரைபடம் | அ.சா.4 |
| அ.சா.ஆ.7 | 11.04.2021 | எதிரி நீக்கல் அறிக்கை | அ.சா.4 |
| அ.சா.ஆ.8 | 06.04.2021 | ரேகா என்பவரது விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்றிதழ் | அ.சா.4 |

**அரசு தரப்பில் குறியிடப்பட்ட சான்றுப்பொருட்கள்**:- இல்லை

**எதிரிகள் தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்**:-இல்லை

ELAVARASI Digitally signed by ELAVARASI Date: 2026.06.05 05:34:57 +0530

நீதித்துறை நடுவர் எண். I,

திண்டிவனம்.